

# 50 மீட்டர் தொலைவில் புது ஆலயம்

பக்கம் 13

## - டாக்டர் ஸலிஹா உறுதிப்படுத்தினார்

**கோலாலம்பூர், மார்ச் 26 - ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவுக்கு அருகில் வீற்றிருக்கும் தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் அமையவிருக்கும் புதிய இடத்தை அரசாங்கம் அடையாளம் கண்டு அதை உறுதிப்படுத்தி இருக்கிறது. அப்புதிய இடமானது, தற்போது அவ்வாலயம் அமைந்திருக்கும் இடத்திலிருந்து 50 மீட்டர் தூரத்திற்கு அருகிலேயே இருப்பதாகவும் அந்நிலத்தின் சுற்றளவு 4,000 சதுர அடி என்றும், கூட்டரசு பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தப்பா தெரிவித்துள்ளார்.**

## 50 மீட்டர் தொலைவில்...

இந்த 4,000 சதுர அடியானது, தற்போது அவ்வாலயம் அமைந்திருக்கும் நிலப்பரப்பிற்கு சமமானதாகும் என்று ஸலிஹா தெரிவித்தார்.

லோட் பிடி95, செக்‌ஷன் 40, முக்கிம் பண்டார் கோலாலம்பூரின் ஒரு பகுதியில் அந்நிலம் இருப்பதாகக் கூறிய அவர், ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் எப்போது அப்புதிய இடத்திற்கு மாறுவதற்கான பணிகள் தொடங்கும் என்பது குறித்த தகவல்களை வெளிப்படுத்தவில்லை.

இந்து மக்கள் வசதியாகவும் இணக்கமுடனும் தங்களின் சமய நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதை உறுதிப்படுத்த, ஆலயம் மாற்றப்படுவதற்கான புதிய இடத்தை தமது தரப்பு அடையாளம் கண்டு விட்டதாக கோலாலம்பூர் மாநகராண்மைக் கழகத்தின் வர்த்தகத் திட்டமிடல் பிரிவு ஓர் அறிக்கை வழி தெரிவித்திருந்தது. இதனிடையே ஆலய விவகாரம்: ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதியில் உள்ள தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்தை அருகில் உள்ள ஒரு பகுதிக்கு இடமாற்றம் செய்வதற்கு ஆலய நிர்வாகம் ஒப்புக் கொண்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்துடன் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட விவாதத்தில் அந்த இணக்கம் காணப்பட்டது என்று அந்த ஆலயத்தின் செயலாளர் கார்த்திக் குணசீலன் தெரிவித்தார். இந்த இணக்கத்தைக் காண்பதற்கு உறுதுணையாக இருந்த அமைச்சர், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், இதர அதிகாரிகள் ஆகியோருக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம் என்றார் அவர்.

ஆலயம் இடமாற்றம் செய்யப்படவிருக்கும் பகுதி அதன் அருகில்தான் உள்ளது. ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதிக்குள் அது உள்ளடங்கியுள்ளது என்றார்.

சர்ச்சைக்குரிய இடத்தில் மடானி பள்ளிவாசலை நிர்மாணிப்பதற்கான கால்கோள் விழாவில் தாம் கலந்துகொள்ளவிருப்பதை பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் நேற்று காலையில் உறுதிப்படுத்தினார்.

புதிய பள்ளிவாசலுக்கு வழிவிடும் வகையில் அந்த ஆலயம் இடமாற்றம் செய்யப்படவிருப்பதாகத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து பெரிய சர்ச்சை ஏற்பட்டது.